DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 273/2023

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | செந்தாமரைச் செல்வி |
| Father's Name | : | வேலுச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.11.2025

**1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருமாநிலையூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.08.2016ம் தேதி முதல் 28.02.2019ம் தேதி வரை மண்மங்கலம் வட்டம், ஆண்டாங்கோவில் மேற்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். பொதுக் கலந்தாய்வில் 01.03.2019லிருந்து இனாம் கரூர்

கிராம நிர்வாக அலுவலராக பணி மாறுதல் பெற்றேன். பின்பு 05.09.2019 முதல் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று மண்மங்கல் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தேன். அந்த சமயத்தில் 15.04.2020 அன்று ஆண்டாங்கோவில் மேற்கு கிராமம், வேப்பம்பாளையம் என்ற முகவரியை சேர்ந்த மாரப்ப கவுண்டர் மகன் செல்வ குமார் என்பவர் ஆண்டாங்கோவில் மேற்கு கிராம புல எண்.1121/1 தனக்கு சொந்தமான நிலம் என்றும், அதில் நான் தவறான உரிமைச் சான்றிதழ் தங்கராஜ் என்பவருக்க வழங்கியதாகவும், எனவே, என்மீது நடவடிக்கை எடுக்க கோரியும் மண்மங்கலம் வட்டாட்சிய அலுவலத்திற்கு புகார் அனப்பியிருந்தார்.இது தொடர்பாக வட்டாட்சியர் என்னிடம் மேற்படி புகாரை காண்பித்தார்.

2. அதை பார்த்தபோது, அந்த புகாருடன் இணைக்கப்பட்டிருந்த மேலக் கரூர் சார்பதிவாளர் ஆவண எண்.8582/2018 நாள் 25.10.2018ல் பதிவு செய்த ஆவணத்துடன் அதில் ஒரு உரிமைச் சான்று இணைக்கப்பட்டிருந்தது. அந்த உரிமைச் சான்றிதழ் என்னால் வழங்கப்படவில்லை என்பதைநான் அறிந்தேன். இது தொடர்பாக வட்டாட்சியரிடம் தெரிவித்தேன். அவர் இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் கொடுக்க அறிவுறுத்தியதன்பேரில் மறுநாள் 16.04.2020 அன்று தாந்தோன்றிமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். இது தொடர்பாக 31.07.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி எனது வாக்குமூலத்தை அளித்தேன். 22.12.2020 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மேலக் கரூர் சார்பதிவாளர் அலுவலதகத்தில் 25.10.2018 ல் பதிவான பாக சாசன பத்திரம் ஆவண எண்.8582/2018 ன் சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**